செய்திக் குறிப்பு

இன்று தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு இன்று காலை மாவட்ட ஆட்சியரகம் எதிரில் பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த நாட்டு நலப்பணித்திட்ட மாணவ-மாணவிகள் வாக்களிப்பதின் அவசியத்தை வலியுறுத்தி பல்வேறு பதாகைகளுடன் முக்கிய வீதி வழியாக டனால் தங்கவேல் கலையரங்கை சென்று அடைந்தார்கள். மேலும் இதன் ஒரு பகுதியாக பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் வாக்காளர் கல்வியறிவு சங்கம் துவக்கவிழாவினை மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன். இ.ஆ.ப. மற்றும் திரு. சு. கோ. சரவணன். இ.வ.ப. அவர்களும் துவக்கி வைத்தார்கள். பிறகு மாவட்ட ஆட்சியர் பேசுகையில் வாக்களிப்பதின் அவசியம் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் பேசினார்கள். மேலும் இந்திய வருவாய் அதிகாரி திரு. சரவணன் அவர்கள் பேசுகையில் ஒவ்வொரு கல்லூரியிலும் 20 அல்லது அதற்கு மேல் உள்ள இளைஞர்கள் கல்வியறிவு சங்கங்களை ஆரம்பிக்கலாம். நீங்கள் மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ கூடி வாக்களிப்பதின் முக்கியத்துவத்தை பற்றி கலந்து ஆலோசிக்கலாம். பிறகு அதை இளம் வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவத்தையும் அதன் மூலம் ஜனநாயகம் மலர்வதையும் எடுத்துரைக்கலாம் என்றும் கூறினார்கள். உடன் கூடுதல் மாவட்ட ஆட்சியர் திரு. மங்களநாதன் மற்றும் 100-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

25/1/18